காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தமிழ்ப்பண்பாட்டு மையம், மலேயா பல்கலைக்கழகம், மலேசியா, பேனா எழுத்தாளர் சங்கம், அனுராகம் பதிப்பகம் ஆகியன இணைந்து நடத்தும் “இந்தியா-ஆசியான் கவிஞர்கள் பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2017” இரண்டு நாட்கள் கருத்தரங்கின் தொடக்க விழா இன்று 27-11-2017 அன்று பல்கலைக்கழக லெ.சித.லெ.பழநியப்ப செட்டியர் நினைவுக் கலையரங்கத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து 50க்கும் மேற்பட்ட கவிஞர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கவிஞர்களும் தமிழ் அறிஞர்களும் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.



அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ.சுப்பையா கருத்தரங்கினைத் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். அவர்தம் உரையில் மொழி ஓர் இனத்தின் அடையாளம் என்றும், பண்பாடு அவ்வினத்தின் செயல்பாடுகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்றும் கூறினார். மலாய் மொழியில் எழுதப்பட்டு தமிழில் மொழிப் பெயர்க்கப்பட்ட கவிதைகளை ஒப்பிட்டு தமிழ்மொழிக்கும் மலாய் மொழிக்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசினார். மனித உணர்ச்சியின் வெளிப்பாடு தான் கவிதை என்றும எண்ணங்களை அழகான மொழியில் கூறுவதே அதன் சிறப்பு என்றும் தன் கருத்துக்களைப் பிறர் எளிதில் புரியும்படி எடுத்துக்கூறுபவர்தான் உண்மையான கவிஞர் என்றும் கூறினார். தமிழ் மூதாட்டி ஔவையார் விலங்கினத்திலிருந்து மனிதனை வேறுபடுத்தி மனிதனை மனிதனாக வாழவைப்பது தான் பண்பாடு என்று குறிப்பிட்டதையும் , மக்களின் வாழ்க்கையை வளர்க்கும் அனைத்துத் துறைகளும் பண்பாடு என்ற சொல்லிலே அடங்கும் என்று ஆங்கிலக் கவிஞர் மாத்யூ அர்னால்ட் கூறியதையும் நினைவு கூர்ந்தார். உழவு எவ்வாறு நிலத்தை பண்படுத்துகிறதோ அதைப் போல மனத்தைப் பண்படுத்துவது பண்பாடாகும் என்றும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் சிறப்புரை ஆற்றனார். அவர்தம் உரையில் தமிழகப் பல்கலைக்கழகங்களிலேயே முதன் முதலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மட்டுமே தமிழர்களின் பழமையான பண்பாட்டையும் கலாச்சாராத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு தமிழ்ப்பண்பாட்டு மையத்தை நிறுவி பண்பாட்டு மைய அருங்காட்சியத்தையும் அமைத்திருக்கிறது என்று பாராட்டினார். பாராலிம்பிக் விளையாட்டில் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அழகப்பா பல்கலைக்கழக பாரா விளையாட்டு மைய மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் யு.செல்வராசுக்கு அவரை ஊக்குவிக்கும் வகையில் அழகப்பா பல்கலைக்கழகம் ரூபாய் ஏழு இலட்சம் ரொக்கப்பரிசு வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது என்றும் கூறினார். தொடர்ந்து அவர்

பேசுகையில் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தது நமது தாய் மொழியான தமிழ் என்றும் தமிழ் மொழி மட்டும் தான் துன்பமில்லா வாழ்வை வாழ்வதற்கான நெறிமுறைகளை

வகுத்துள்ளது என்றும் உலக மொழிகளில் பக்தி மொழி என்ற பெருமை தமிழ் மொழிக்கே உண்டு என்றும் ஜி.யூ.போப் என்ற அறிஞர் திருவாசகத்தின் பெருமையை உணர்ந்து அதனைப் போற்றியது வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார் உழைககும் கரங்கள் இருந்தால் பாலைவனமும் சோலைவனமாக மாறக்கூடிய சூழ்நிலை வரும் என்றார்.
கவலை நேரும் போதெல்லாம் தமிழைப் படித்தால் கவலை நீங்கும் என்றார். பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் தமிழுக்கு அழகு சேர்த்ததுபோல் அழகப்பா பல்கலைக்கழகம் தமிழ்ப்பண்பாட்டு மையத்தை நிறுவி தமிழர்களின் பண்பாட்டையும்




கலாச்சாரத்தையும் மீட்டெடுக்கும் வகையில் அரிய பணியாற்றி வருகிறது என்றும் தெரிவித்தார். சாகித்ய அகடமி மேனாள் உறுப்பினர் கவிஞர் தங்கம்மூர்த்தி அவர்கள்தனது வாழ்த்துரையில் உலகில் புன்னகை போல ஒரு சிறந்த கவிதை வேறொன்றும் இல்லை என்றார். பின்னால் நடக்கவிருப்பதை முன்கூட்டியே கற்பனை செய்து பாடக்கூடியவன் கவிஞன் என்றும் மானுடத்தை உலக முழுவதற்கும் கொண்டு சேரப்பவர்கள் கவிஞர்கள் என்றும் குறிப்பிட்டு ஒருவரிடம் கவிதை குடிகொண்டிருந்தால் மனித நேயம் எப்போதும் அழியாது என்றும் குறிப்பிட்டார். பிறமொழிக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளை நாம்அவசியம் வாசிக்க வேண்டும் என்றார்.
கவிதையில் தான் அழகு இருக்கிறது.அவ்வகையில் தமிழ் மொழி அழகான கவிதைகளைக் கொண்ட மொழியாகும் என்றார்.




பன்னாட்டுக் கருத்தரங்கு ஆய்வுகோவையினை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ.சுப்பையா அவர்கள் வெளியிட தவத்திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள் பெற்றுக்கொண்டார். குறுந்தகடு மற்றும் தமிழ்ப்பண்பாட்டு அருங்காட்சியக கையேட்டை தவத்திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள் வழங்கிட பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ.சுப்பையா அவர்கள் பெற்றுக்கொண்டார். மலாய் மொழியில் எழுதப்பட்டு தமிழில் மொழிப் பெயர்க்கப்பட்ட 107 கவிதைகள் அடங்கிய இந்தியா – ஆசியான் கவிதைத் தொகுப்பை துணைவேந்தர் அவர்கள் வெளியிட மலேயா பல்கலைக்கழக இந்தியவியல் துறை பேரா. முனைவர் கிருஷ்ணன் மணியம் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழக பாரா விளையாட்டு பயிற்சி மைய வீரர் அ.செல்வராஜ் அண்மையில் கனடா நாட்டின் டொராண்டோ மாநகரில் நடைபெற்ற உயரம் குன்றியவர்களுக்கான 7வது உலக தடகள போட்டியில் பங்கேற்று ஈட்டி எறிதல் பிரிவில் 26.54மீ தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். இவரைக் கௌரவிக்கும் வகையில் அழகப்பா பல்கலைக்கழகம் ரூபாய் ஏழு இலட்சம் ரொக்கப்பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி சிறப்பித்தது. இந்த ரொக்கப்பரிசுக்கான காசோலையை துணைவேந்தர் அவர்களிடமிருந்து திரு.யு.செல்வராஜ் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த ப்ரீ ஹார்ட்டி, சிங்கப்பூரைச் சேர்ந்த சம்சுதீன் சை, மற்றும் மலேசியாவைச் சேர்ந்த முகம்மது சாலே ரஹ்ம்மத் போன்ற அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் ஆட்சிகுழு உறுப்பினர்கள், புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், நகரப் பிரமுகர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக, பல்கலைக்கழகப் பதிவாளர்(பொ) வி.பாலச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார். தமிழப்பண்பாட்டு மைய இயக்குநர் முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை நன்றி கூறினார்.

பன்னாட்டுக் கருத்தரங்கத் தொடக்க விழாவிற்கு முன்னதாக, தமிழ்ப்பண்பாட்டு அருங்காட்சியகத் திறப்பு விழா நடைபெற்றது. பல்கலைக்கழகழகத் துணைவேந்தர் பேரா. சொ.சுப்பையா அவர்கள் தலைமையில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி க.லதா இ.ஆ.ப. அவர்கள் அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்து அருங்காட்சியத்தில் காட்சிப்படுத்தபபட்டிருந்த அனைத்தையும் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், காரைக்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எச்.ராஜா மற்றும் முன்னாள் நகர்மன்றத் தலைவர் திருமதி கற்பகம் இளங்கோ ஆகியோர் உடனிருந்தனர். இந்நிகழ்ச்சியில் ஆட்சிகுழு உறுப்பினர்கள், புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் நகரப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பேரா. வி. பாலச்சந்திரன்

பதிவாளர்(பொ)